16.12.2024 பி.வா.சா.1 சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு99 சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை. (ஓ.எஸ்.எண்.132 /2019 )திரு.பொன்ராஜ்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு சொத்திற்கு வடபுறம் எனது நிலம் உள்ளது என்றால் சரிதான். அதில் வீடும், காலியிடமும் உள்ளது என்றால் சரிதான். எனது இடத்திற்கு தென்புறம் வாதியின் இடத்திற்கு மேல்புறம் யார் இடம் உள்ளதுள ன்றால் உலகநாதன் இடம் உள்ளது. எனது இடத்திற்கு எனது அம்மா பெயரிலும், அப்பா பெயரிலும் தனித்தனியாக கிரையப்பத்திரம் உள்ளது அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது சகோதரியிடமிருந்து விடுதலைப்பத்திரம் 2020 ஆம் ஆண்டு எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனது சகேர்தரிடம் எழுதிவாங்கியுள்ள் விடுதலை ஆவணத்தில் சொத்தின் கிழமேல், தென்வடல் அளவு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது சகோதரி எழுதிக்கொடுத்த விடுதலை ஆவணத்தில் கிழமேல், தென்வடல் அளவுகள் குறிப்பிடாததற்கு காரணம் எதுவும் உண்டா என்றால் பத்திர எழுத்தரிடம் ஆவணங்களை கொடுத்தோம், நாங்கள் கையெழுத்து செய்தோம். வாதியின் தாவாச்சொத்து எனக்குப் பாத்தியப்பட்ட சொத்து மற்றும் உலகநாதனுக்குப் பாத்தியப்பட்ட சொத்து மற்றும் இதர வடக்கு மற்றும் மேற்கு புறம் உள்ள சொத்துக்கள் ஆதியில் ஒரே நபருக்குப் பாத்தியப்பட்டியிருந்தது என்றால் எனக்குஅதுபற்றி தெரியாது.

2) எனது தாயாரின் பெயரில் உள்ள கிரையப்பத்திரமான பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் எனது தாயாரின் பெயரிலும், செல்லையா நாடாரின் பெயரிலும் கூட்டாக கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி இருவரில் யாருக்கு எந்த பக்கம் சொத்து உள்ளது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி இருவருக்கும் இடையே பி.வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தைப்பற்றி பிரிக்கப்பட்டது எனக்கு தெரியாது என்றும் அதற்கான ஆவணம் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ன் அசல் ஆவணம் இல்லை என்றால் என் கைவசம்உள்ளது.

அசல் ஆவணத்தை தாக்கல் செய்யாததற்கு காரணம் எதுவும்இல்லை என்றால் இல்லை தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். எனது தந்தை பெயரில்1963 ல் கிரையம்பெறப்பட்டதாக பி.வா.சா.ஆ.2 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்த நபரிடமிருந்து எனது தந்தை பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை கிரையம் பெறப்படவில்லை என்றால் எனக்கு சரியாகதெரியாது அவரின் வாரீசுகளிடமிருந்து கிரையம் பெற்றியிருக்கலாம்.

3) பி.,வா.சா.ஆ.2 ஆவணத்தில் தபசில் விவரத்தில் பி.வா.சா.ஆ.1 சொத்தின் விவரத்தில் மாலாக குறிப்பிடப்படவில்லை என்றால் தவறு. அனந்தம்மாள் நிலத்திற்கு மேல்புறம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தாயார் பி.வா.சா.ஆ.1 ஐ கிரையம் பெறும் போது காலிமனையாக கிரையம் பெற்றார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 அனந்தம்மாள் வீட்டிற்கும் மேற்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சாட்சியத்தில் பி.வா.சா.ஆ.1ன் சொத்திற்கு மேற்கு செல்லையா நாடாருக்கு கிரையம் கொடுக்கப்பட்டதாக சொல்லிவிட்டு பி.வா.சா.ஆ.2 ல் மேற்கு மாலாக பி.வா.சா.ஆ.2 கிரையச்சொத்தில் மேற்கு மாலாக செல்லையா நாடாரின் சொத்து காண்பிக்கப்படவில்லை என்றுசொன்னால் பி.வா.சா.ஆ.1 கூட்டாக பெற்ற கிரையப்பத்திரத்தில் எனது தாயார் கீழ்பக்கம் வீடு கட்டியுள்ளார். மேல்பக்கத்தில் உள்ள செல்லையா நாடாரின் சொத்தை எனது தகப்பனார் கிரையம் பெற்றுள்ளார். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை எழுதிக்கொடுத்த நபர் செல்லையா நாடாரோ அவரின் வாரீசுகளளோ இல்லை என்றால் சரிதான். 4) பி.வா.சா.ஆ.1,2 ஆவணத்தில் தபசில் சொத்தின் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது அம்மா கிரையம் பெற்ற மேல்புறம் உள்ள இடத்தை தான் எனது தந்தை கிரையம் பெற்றதாக சொல்லுகிறேன் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தாயாரின் இடதிற்கு கீழ்புறம் இடத்தை கிரையம் பெற்றதாக கண்டுள்ளது என்றால் தவறு மேல்புறம் தான். எனது தாயார் கிரையம் பெற்ற சொத்தின் கீழ்புறம் தென்வடல் தெரு உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேல்புறம் மாலாக பூரணம் செட்டியார் வீடு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் வடபுறமும்,

மேல்புறமும் செட்டியார் தான் வசித்து வந்தார்கள் அவர்கள் பெயர் பூரணம் செட்டியாரா என்று எனக்குத்தெரியாது.பி.,.சா.ஆ.1,2 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் தாவாச்சொத்தின் வடபுறம் உள்ள சொத்து இல்லை என்று சொன்னால் தவறு. பி.வா.சா.ஆ.1,2 ஆவணத்தில் கண்டுள்ள அளவுகள்படி பி.வா.சா.ஆ.3 பாகவிடுதலை ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் முன் ஆவணமும், பட்டாவும் குறிப்பிட்டுள்ளேன். ஆவணத்தில் உள்ள அளவும், பட்டாவில் உள்ள அளவும் சரியாக உள்ளதா என்று சொல்ல முடியுமா என்றால் அனுபவம் செய்யும் அளவுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. வருவாய் துறை ஆவணமான பட்டாவில் எனக்கு அதிகமான இடம் கொடுக்கப்பட்டுள்ளதால் தான் பி.வா.சா.ஆ.3 பாகவிடுதலை ஆவணத்தில் சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

5) நான் சொல்லுகிற படி பிராது 2ம்தபசில் சொத்து எனக்குப் பாத்தியப்பட்டது இல்லை என்றும், பிராது 1வது சொத்தின் ஒரு பகுதி பிராது 2ம்தபசில் சொத்து என்றால் சரியல்ல. பிராது 1வது தபசில் சொத்து நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பே வாதி தரப்பில் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிற சொத்து என்றால் இல்லை. வாதியின் தந்தை கிரையம் பெற்ற சொத்து பிராது 1வது தபசில் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் வாதியின் தந்தை வீடு கட்டி அதை தற்போது வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் வாதியின் தந்தை வீடு கட்டிய போது நாங்கள் அங்கு குடியிருக்கவில்லை. வாதியின் தந்தை வீடு கட்டிய போது எங்களது வீடு கட்டப்படவில்லை என்றால் தவறு எங்களது வீடு தான் முதலில் கட்டப்பட்டது. நான் வாதியின் வீட்டிற்கு நேர் வடக்கே எங்களது வீடு கட்டப்பட்டுள்ளது. கட்டப்பட்டப்பட்டதிலிருந்து மாற்றப்பட்டுள்ளதா என்றால் இல்லை மண் சுவரும் ஓட்டு வீடுமாகதான் தற்போதும் உள்ளது. பி.வா.சா.ஆ.3 பாகவிடுதலை ஆவணத்தில் கட்டிடத்தின் வயது 80 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு காண்பிக்கப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1,2 ஆவணங்களின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.3 ஆவணம்

ஏற்படுத்தவில்லை என்றும் ஆகையால் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் எனக்கு எவ்வித பாத்தியமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி – வழக்கறிர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியன் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
16.12.2024.